**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.522/2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 20.12.2024**

| | |
|---|---|
| **Name :மாதையன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தாரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 09.08.2023-ம் தேதி இரவு 10.00 மணிக்கு இவ்வழக்கில் நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, பழனியப்பன் மகன் கதிரேசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 440/2023 ச/பி 279, 337 304(A) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 2** ஆகும்.

2) பிறகு நான் கடந்த 09.08.2023 ம் தேதி இரவு 11.00 மணிக்கு சம்பவயிடமான மேச்சேரி டூ தொப்பூர் ரோடு சந்திரமா கடை பஸ்ஸ்டாப் குக்கம்பட்டி பிரிவு ரோடு அருகே சாட்சிகள் சசிகுமார் மற்றும் கார்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். **மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 ஆகும்.**

3) இவ்வழக்கின் சாட்சிகளை நான் கதிரேசன், சசிகுமார், கார்த்தி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காயம்பட்ட வளர்மதி என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சண்முகம் வசம் ஒப்படைத்தேன்.ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.